26.11.2025 Mcop 378/2021 .ம.சா1 அய்யப்பன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

என் வயது, வேலை, வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட பாலிசியானது Own Damage Policy என்பதால் வாகனத்தின் சேதாரத்திற்கு மட்டுமே கோரமுடியும் என்றும், என் காயத்திற்காக கோர முடியாது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயம் நான் என் வாகனத்தை கவனமாகவும், மெதுவாகவும் தான் ஒட்டினேன் என்றால் சரிதான். தேவையான நபர்களை இந்த மனுவில் சேர்க்காததால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் காரணம் இல்லை என்பதால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல என்றால்சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றும் அவை அனைத்தும் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால்சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி
தென்காசி.